| | | |
|---|---|---|
| சாட்சி : PW 2<br>திரு.சேட்டு<br>த.பெ. திரு. பெரியசாமி | அ.வ.எண்.234/2015 | 13.10.2025 |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனது சொந்த ஊர் மண்ணச்சநல்லூர் தாலுக்கா பாண்டியபுரம் என்றால் சரிதான். வாதி ராதா எனது உறவினரா என்றால் ஆமாம், எனது தாய்மாமாவின் மகன். வழக்கின் விபரங்கள் மற்றும் வழக்கு சொத்தின் புல எண் குறித்து எனக்கு யார் சொன்னது என்றால் யாரும் சொல்லவில்லை, எனக்கே தெரியும். எனது வீடு எந்த புல எண்ணில் உள்ளது என்றால் புல எண்.121/2A ல் உள்ளது. தாவா 2 வது அயிட்ட சொத்து எந்த புல எண்ணில் உள்ளது என்றால் பழைய புல எண்.53/1, புதிய புல எண்.53/61B.

2) தாவா 2 வது அயிட்ட பாதை மேற்படி புல எண்.53/61B ல் உள்ளதா என்றால் மேற்படி புல எண்ணில் தான் உள்ளது. எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பத்தி.3 ல் மேற்படி பாதைக்கு வடபுறத்தில் பொது நத்தம் புறம்போக்கு காலியிடம் உள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா 2 வது அயிட்ட சொத்து பாதை தான் என்று எதை வைத்து கூறுகிறேன் என்றால் புல வரைபடத்தில் பாதை என்று உள்ளது.

3) தாவா 2 வது அயிட்ட சொத்தின் உரிமையாளர்கள் யார் என்றால் அது நத்தம் புறம்போக்கு என்பதால் அதற்கு உரிமையாளர்கள் என்று யாரும் கிடையாது. தாவா 2 வது அயிட்ட சொத்து நத்தம் புறம்போக்கு என்பதை என்ன ஆவணங்களை பார்த்து தெரிந்துகொண்டேன் என்றால் வருவாய் ஆவணங்கள் பார்த்து தெரிந்துகொண்டேன். 2 வது அயிட்ட பாதையின் கிழமேல், தென்வடல் அளவுகள் என்ன என்றால் தென்வடல்

27 அடி, கிழமேல் 112 அடி. மேற்படி அளவுகள் புல வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

4) தாவா 2 வது அயிட்ட சொத்தில் பிரதிவாதிகள் வீடுகட்ட முயற்சிப்பதாக நான் கூறுவது எந்த வருடம் என்றால் 2015 ம் வருடத்தில், ஆனால் மாதம், தேதி, தெரியாது. தாவா 1 வது அயிட்ட சொத்தின் புல எண் என்ன என்றால் புல எண்.53/72, 53/73. மேற்படி புல எண்கள். .53/72, 53/73 ன் விஸ்தீரணம் என்ன என்றால் மேற்படி 2 புல எண்களையும் சேர்த்து தென்வடல் 17 அடி, கிழமேல் 20 அடி.

5) தாவா 1 வது அயிட்ட சொத்தின் கீழ்புறம் RCC வீடும், மேற்கில் ஆஸ்பெட்டாஸ்வீடும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி தாவா 1 வது அயிட்ட சொத்தில் காலியிடம் உள்ளதா என்றால் இல்லை, அனைத்தும் கட்டுமான பகுதி. தாவா 1 வது அயிட்ட சொத்திற்கு கீழ்புறத்தில் புல எண்.53/74, 53/75 உள்ளது என்றால் சரிதான். புல எண்.53/74, 53/75 ன் உரிமையாளர்கள் யார் என்றால் வள்ளியம்மை மட்டும் தான் தெரியும்.

6) மேற்படி வள்ளியம்மையின் வீடு என்ன வீடு என்றால் RCC வீடு. புல எண்.53/61 ஆனது எப்போது புல எண்.53/61B ஆக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது, வாதி என்னிடம் சொல்லவில்லை. தாவா 1 வது அயிட்ட சொத்தின் புல எண்.53/72, 53/73 லேயே வடபுறத்தில் 3 அடி பாதை உள்ளதாகவே நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

7) நான் நீதிமன்ற ஆணையர் அறிக்கையை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. பிறகு எதன் அடிப்படையில் நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில், தாவா 1வது அயிட்ட சொத்தின் புல எண்.53/72, 53/73 லேயே வடபுறத்தில் 3 அடி பாதை உள்ளதாக குறிப்பிடவில்லை என்று கூறுகிறேன் என்றால் முன்னதாக புலவரைபடத்தில் உள்ளதை வைத்து கூறுகிறேன். புல எண்.53/61 ற்கான பழைய புல எண் என்ன என்றால் புல எண்.53/1.

8) மேற்படி புல எண்.53/61 ற்கு 28 நபர்கள் பெயரில் பட்டா ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி 28 நபர்களில் வாதிகளின் பெயர் உள்ளதா என்றால் 1ம் வாதி ராதாவின் தகப்பனார் கலியன் பெயர் உள்ளது. மீதமுள்ள 27 பட்டாதாரர்கள் யார் என்றால் தெரியாது. 1ம் வாதியின் தகப்பனார் பெயர் உள்ளதை என்பதை வருவாய் ஆவணங்களை பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் ஆமாம்.

9) நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு 2வது அயிட்ட சொத்தை வாதிகளோ, கிராமத்தாரோ ஒரு போதும் பாதையாக பயன்படுத்தியது கிடையாது என்றாலும், நான் வாதிகளுக்கு ஆதரவாக இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதியின் மீது உள்ள எனது அக்கறையின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.